**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 103/2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராஜேந்திரன் | தொழில் | : | சலூன் கடை |
| கிராமம் | : | வள்ளியம்மாள்புரம் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 12th, 2025.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை.கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வள்ளியம்மாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சலூன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதல்ல. எனக்கு இந்த வழக்கு விபரம் பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 18.03.2019 ல் நானும், விக்னேஷ்வரன் என்பவரும் மாதாபட்டிணம் பஸ்ஸ்டாப் அருகில் நின்றிருந்த சமயம் அங்கு வந்த கடையம் வட்ட ஆய்வாளர் காவல்நிலைய

குற்ற எண்.103/2019 வழக்கில் சம்பந்தப்பட்ட 2வது எதிரியான கேசவராஜை கைது செய்து விசாரித்தபோது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு கேரளா மாநிலத்தில் இருந்து தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை தனது இருசக்கரவாகனமான TN-76-AH-8596 என்ற ஆக்டிவா வாகனத்தில் வாங்கி வந்ததாகவும், மேற்படி வாகனத்தை அவர் ஆஜர் செய்ததாகவும், அந்த வாகனத்தை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியபோது, நானும், விக்னேஷ்வரனும் அத்தாட்சியில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.12 19:29:35 +0530